IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, ALANGUDI

**Deposition of witness**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**CC No.232/2018**

**Deposition of witness for PW.18**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலாஜி | தந்தை பெயர் | : | கலைராஜ் |
| கிராமம் | : | ஜெயங்கொண்டம் | மாவட்டம் | : | அரியலூர் |
| வயது | : | 55 | தொழில் | : | காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed by Selvi.B.Sendhurdevi, Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**(Accused Absent. Petition filed u/s 317 Cr.P.C filed and allowed.Both side Counsel Present) (Date: 09.06.2026)**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aadhaar Card of Witness verified.**

**முதல்விசாரணை**

நான் தற்போது அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.10.2018 ம் தேதி வடகாடு காவல் நிலையத்தில் நான் ஆய்வாளராக பணியில்இருந்தபோது வடகாடு காவல் நிலைய குற்ற எண் 74/2018 பிரிவுகள் 304(A)இ.த.ச வழக்கு கோப்பு பார்வையிட்டு விசாரணைக்கு எடுத்து கொண்டேன். அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டும் சாட்சிகளை விசாரணை செய்தேன். மேற்படி சாட்சிகள் அனைவரும் ஆய்வாளர் திரு. கிருஷ்ணராஜன் அவரிடம் கூறிய சங்கதிகளையே என்னிடம் கூறியதால் தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் புதுக்கோட்டை வட்டார போக்குவரத்து அலுவலகம் சென்று வாகன ஆய்வாளர் திரு. பாலசுப்ரமணியன் என்பவரை விசாரித்தும்,

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனங்கள் TN 49-BV 1750 என்ற Hero splendor வாகனம் மற்றும் TN 51 J 9522 Tata Indica vesta ஆகியவற்றின் வாகன ஆய்வறிக்கை பெற்று மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்தேன். **TN 49-BV 1750 என்ற Hero splendor வாகனத்தின் ஆய்வறிக்கை அ.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 51 J9522 Tata Indica vesta வாகனத்தின் ஆய்வறிக்கை அ.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை சென்று மருத்துவர் திரு. வள்ளியப்பன் என்பவரை விசாரித்தும் இவ்வழக்கில் இறந்த பிரகாஷ் மற்றும் பாலமுருகன் ஆகியோரின் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றும் மருத்துவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பின்னர் காவலர் 416 செல்வராஜ் என்பவரை விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பின்னர் 15.10.2018 ம் தேதி இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரி அற்புதராஜ் மீது 304(A) இ.த.ச படி இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

வழக்கு சம்பவமானது 22 7 2018 அன்று மாலை 3:15 மணியளவில் நடந்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கின் புகார் மனு மறுநாள் காலையில் 15 மணி நேரம் காலதாமலமாக கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி, காலதாமதத்திற்கான காரணத்தை எனது புலன் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால், சரிதான். முதல் தகவல் அறிக்கையில் எட்டாவது வரிசையில் காலதாமதத்திற்கான காரணத்தை சரியான விபரத்தை குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கின் இரு வாகனங்களையும் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு ஆய்விற்கு வேண்டுகோள் கடிதம் நான் கொடுக்கவில்லை என்று சொன்னாலும் வாக்குமூலம் மட்டுமே பதிவு செய்ததாக கூறுகிறேன் என்று சொன்னாலும் சரிதான். இவ்வழக்கில் இறந்து போன பாலமுருகன் மற்றும் பிரகாஷ் ஆகிய இருவருக்கும் ஓட்டுனர் உரிமம் இருந்ததா என்பது குறித்தும் தலைக்கவசம் அணிந்திருந்தனரா என்பது குறித்தும் புலன் விசாரணையில் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரிதான் ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதை குறிப்பிட்டுள்ளேன். முதல் தகவல் அறிக்கையில் சம்பவ இடம் காவல் நிலையத்தில் இருந்து 5 கிலோமீட்டர் தொலைவில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். விபத்தினை ஏற்படுத்தியதாக கூறப்படும் எதிரியின்

வாகனத்தை சம்பவத் தேதியில் இருந்து எட்டு நாள் காலதாமதமாக மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எதிரிக்கு எதிராக கொடுக்கப்பட்ட பொய்யான புகாரின் பேரில் நான் முறையான படம் விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக குற்றம் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் இறந்து போன பிரகாஷ் மற்றும் பாலமுருகன் இறப்பிற்கு எதிரி காரணமல்ல என்று சொன்னாலும் சரியல்ல எதிரி தனது வாகனத்தை அதி வேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் இயக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சி அதை படித்துப் பார்த்து சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு அவரால் கையொப்பமிடப்பட்டது

**மாவட்ட உரிமையியல் மற்றும்**

நீதித்துறை நடுவர்,

**ஆலங்குடி(பொறுப்பு)**